# பொன்னேரி நகராட்சி
# நகர்மன்ற சாதாரணக்கூட்டம்

பொன்னேரி நகராட்சியின் நகர்மன்ற அவசரக்கூட்டம் நகர்மன்றத்தலைவர் திருமதி. கே. பரிமளம் விஸ்வநாதன் அவர்களின் தலைமையில் 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30.08.2023 புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்றக்கூடத்தில் நகர்மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் .

## நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்

### பொருள் எண் 1

இந்நகராட்சியின் ஆணையர் அவர்களின் ஆகஸ்ட் 2023 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- மன்றம் அனுமதி அளிக்கலாம்

நகர்மன்ற தீர்மான எண்: 283 நாள்: **30.08.2023**

**தீர்மானம்: ஆணையரின் ஆகஸ்ட் 2023– மாத நாட்குறிப்பு மன்றம் பதிவு செய்கிறது.**

### பொருள் எண் 2

இந்நகராட்சியின் பொறியாளர் அவர்களின் ஆகஸ்ட் 2023 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- மன்றம் அனுமதி அளிக்கலாம்

நகர்மன்ற தீர்மான எண்: 284 நாள்: **30.08.2023**

**தீர்மானம்: பொறியாளர்அவர்களின் ஆகஸ்ட் 2023– மாத நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக அனுமதி அளிக்கிறது.**

### பொருள் எண் 3

பொன்னேரி நகராட்சியில் 20 வது வார்டுக்குட்பட்ட ஜவகர் தெருவில் பாதாள சாக்கடை பணிகள் முடிவுற்றதன் காரணமாக சேதமடைந்த சாலையினை சீரமைக்க பொதுநிதியின் கீழ் சிமெண்ட் சாலை அமைத்திட ஒப்பந்தபுள்ளிகள் கோரி பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மூல மதிப்பீட்டில் சாலையில் நேரடியாக PCC அமைத்திட மட்டுமே வழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்போதைய நிலையில் மேற்படி சாலையில் பாதாள சாக்கடை பணிகள் முடிவுற்றதன் காரணமாகவும், இயற்கை இடர்பாடுகள் காரணமாகவும், சாலை முழுமையாக சேதமடைந்து மண் சாலையாக உள்ளதால் நேரடியாக PCC அமைத்திட இயலாத நிலை உள்ளதால் சாலையின் தன்மையை கருதியும், சாலையின் திறனை ஈரக்கலவை ( WMM ) கொண்டு அதிகரிக்கவும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.1.42 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. சாலை பயன்பாட்டின் அவசியம் கருதி சாலைத்தன்மைக்கு ஏற்ப மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்படி பணிக்கான செலவினத்தினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 104 /2023 அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 285 நாள்: **30.08.2023**

**தீர்மானம்: வார்டு 20–ல் ஜவகர் தெருவில், சாலையின் திறனை ஈரக்கலவை கொண்டு அதிகரிக்க மதீப்பீட்டு தொகை ரூ.1.42 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி அளித்து செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.**

## <u>பொருள் எண் 4</u>

பொன்னேரி நகராட்சியில் **2** வது வார்டுக்குட்பட்ட புதுவாயல் சாலையில் உள்ள மழைநீர் கால்வாய் பழுதடைந்து உள்ளதால் மழைக்காலங்களில் மழைநீர் கால்வாயில் வழிந்தோடாமல் சாலையில் தேங்குவதால் போக்குவரத்திற்கும், பொதுசுகாதாரத்திற்கும் கேடு விளைவிக்கும் நிலை உள்ளது. அதனை தொடர்ந்து அப்பகுதியின் நகர்மன்ற உறுப்பினர் கோரியதின்படி புதுவாயல் சாலையில் பழுதடைந்த மழைநீர் கால்வாயினை சீரமைக்கவும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ. **3.30** இலட்சத்திற்கு மன்றத்திற்கு அனுமதி வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. பொதுமக்களின் அடிப்படை வசதியினை கருத்திற்கொண்டு மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்படி பணிக்கான செலவினத்தினை அரசின் நிதியுதவி/பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 104 /2023 அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 286 நாள்: **30.08.2023**

**தீர்மானம்: வார்டு 2ல் புதுவாயல் சாலையில் பழுதடைந்த மழைநீர் கால்வாயினை சீரமைக்கவும் மதிப்பீட்டு தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி அளித்து அப்பணியின் செலவினத்தை அரசின் நிதி உதவி/ பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்குகிறது.**

## <u>பொருள் எண் 5</u>

பொன்னேரி நகராட்சியில் **22** வது வார்டு எல்லைக்குட்பட்ட பஞ்செட்டி சாலை ஏரிக்கரையில் சுமார் **50**-க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன. மேலும் மேற்படி பகுதியில் போதிய தெருமின்விளக்கு வசதி இல்லாததால் இரவு நேரங்களில் பொதுமக்களுக்கு பாதுகாப்பின்றியும், சமூக விரோத செயல்கள் நடைபெறும் சூழல் உள்ளது. அதனை தொடர்ந்து அப்பகுதியின் நகர்மன்ற உறுப்பினர் கோரியதின்படி மேற்படி பகுதியில் மின்சார வாரியம் மூலம் மின்கம்பம் அமைத்து மின்இணைப்பு பெறுவதற்கும், அதற்கான செலவினத்தை மின்வாரியத்திற்கு கேட்பு பெற்று செலுத்திடவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலகக்குறிப்பு

1. பொதுமக்களின் அடிப்படை வசதியினை கருத்திற்கொண்டு மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்படி பணிக்கான செலவினத்தினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
   (ந.க.எண். 262 /2022 அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 287 நாள்: **30.08.2023**

**தீர்மானம்:** வார்டு 22ல் பஞ்செட்டி சாலை ஏரிக்கரையில் மின்சார வாரியம் மூலம் மின்கம்பம் அமைத்து மின்இணைப்பு பெறுவதற்கும், செலவினத்தை மின்வாரியத்திற்கு கேட்பு பெற்று செலுத்திடவும், மன்றம் அனுமதி அளிக்கிறது. மேற்படி பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கிறது.

## <u>பொருள் எண் 6</u>

பொன்னேரி நகராட்சியில் 21 வது வார்டு எல்லைக்குட்பட்ட பெரியார் தெரு மற்றும் பர்மா நகர் 3வது மற்றும் 4வது தெரு பகுதிகளில் சுமார் 150-க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன. மேலும் மேற்படி பகுதியில் போதிய தெருமின்விளக்கு வசதி இல்லாததால் இரவு நேரங்களில் பொதுமக்களுக்கு பாதுகாப்பின்றியும், சமூக விரோத செயல்கள் நடைபெறும் சூழல் உள்ளது. அதனை தொடர்ந்து அப்பகுதியின் நகர்மன்ற உறுப்பினர் கோரியதின்படி மேற்படி பகுதியில் மின்சார வாரியம் மூலம் மின்கம்பம் அமைத்து மின்இணைப்பு பெறுவதற்கும், அதற்கான செலவினத்தை மின்வாரியத்திற்கு கேட்பு பெற்று செலுத்திடவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலகக்குறிப்பு

1. பொதுமக்களின் அடிப்படை வசதியினை கருத்திற்கொண்டு மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்படி பணிக்கான செலவினத்தினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
   (ந.க.எண். 262 /2022 அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 288 நாள்: **30.08.2023**

**தீர்மானம்:** வார்டு 21ல் பெரியார் தெரு, பர்மா நகர் 3வது,4வது தெருக்களில் மின்வாரியம் மூலம் மின்கம்பம் அமைத்து மின் இணைப்பு பெறுவதற்கு, அதற்கான செலவினத்தை மின்வாரியத்திற்கு கேட்பு பெற்று செலுத்திடவும், மேற்படி பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும், மன்றம் அனுமதி வழங்குகிறது.

## பொருள் எண் 7

பொன்னேரி நகராட்சியில் திருவள்ளூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2022-23 ன்கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் / பெருந்தலைவர் , மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை , திருவள்ளூர் மாவட்டம் அவர்களின் செயலாணைகள் ந.க.எண் 2047/2022/அ10 நாள் **16.05.2023** ன்கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து பணிகளை மேற்கொள்ள 18.08.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது .

| வ.எ | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | பொன்னேரி நகராட்சி வார்டு எண் 5 ல் உயர்கோபுர மின்விளக்கு அமைத்தல் ( 12M , LED 6 Nos, 150 W ) | **4.35** | M/s OS and Co | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | M/s Land Star Infra Tech | மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | பொன்னேரி நகராட்சி வார்டு எண் 6 ல் உயர்கோபுர மின்விளக்கு அமைத்தல் ( 12M , LED 6 Nos, 150 W ) | **4.35** | M/s OS and Co | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | M/s Land Star Infra Tech | மதிப்பீட்டை விட அதிகம் |
| 3 | பொன்னேரி நகராட்சி வார்டு எண் 7 ல் உயர்கோபுர மின்விளக்கு அமைத்தல் ( 12M , LED 6 Nos, 150 W ) | **4.35** | M/s OS and Co | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | M/s Land Star Infra Tech | மதிப்பீட்டை விட அதிகம் |
| 4 | பொன்னேரி நகராட்சி வார்டு எண் 15 ல் உயர்கோபுர மின்விளக்கு அமைத்தல் ( 12M , LED 6 Nos, 150 W ) | **4.35** | M/s OS and Co | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | M/s Land Star Infra Tech | மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு

மேற்படி பணிகளில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த M/s OS and Co நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**( ந.க.எண் 285/2023 /அ1)**

நகர்மன்ற தீர்மான எண்: 289 நாள்: **30.08.2023**

**தீர்மானம்: திருவள்ளூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2022–2023 மாவட்ட ஆட்சியரின் நிர்வாக அனுமதி அளித்ததை தொடர்ந்து பணிகள் மேற்கொள்ள , M/s. OS and Co நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியை ஏற்று. பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி அளிக்கிறது.**

## <u>பொருள் எண் - 8</u>

பொன்னேரி நகராட்சியில் கள்ளுக்கடைமேடு பகுதியில் உள்ள மயானத்தில் அமைக்கப்பட்டுள்ள நவீன LPG தகனமையம் கட்டுமான பணிகள் முடிவுற்று விரைவில் திட்டம் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட உள்ளதால் மேற்படி பகுதியில் மின்தடை ஏற்படும் காலங்களில் தகன மையம் சீராக செயல்படவும், அதற்கு தேவையான 15 KVA திறன் கொண்ட டீசல் ஜெனரேட்டர் சப்ளை செய்து பொருத்திடவும், அதற்கானசெலவினத்தினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலகக்குறிப்பு

1. மேற்படி தகனமைய பயன்பாட்டின் அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. அரசின் GEM விலை விகிதத்தின்படி கிரிலோஸ்கர் தயாரிப்பு ஜெனரேட்டர் கொள்முதல் செய்யவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   (ந.க.எண். 25 /2022 அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 290 நாள்: **30.08.2023**

**தீர்மானம்:** கள்ளுக்கடை மேடு பகுதியில் உள்ள மயானத்தில் / தகன மையம் சீராக செயல்பட 15 KVA- டீசல் ஜெனரேட்டர் சப்ளை செய்யும் பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும், அரசின் GEM விலை விகிதத்தின்படி கிரிலோஸ்கர் தயாரிப்பு ஜெனரேட்டர் கொள்முதல் செய்ய மன்றம் அனுமதி அளிக்கிறது.

## <u>பொருள் எண் - 9</u>

பொன்னேரி நகராட்சி 2வது வார்டு எல்லைக்குட்பட்ட அரசூர் சாலையில் உள்ள மயானப்பூமி பகுதியில் ஈமக்கிரியைகள் செய்ய குடிநீர் வசதி இல்லாததால் பொதுமக்களின் வசதிக்காக மேற்கண்ட மயானப்பகுதியில் ஆழ்துளை குழாய் கிணறு அமைக்கவும், அதற்கான செலவினம் ரூ.1.00 இலட்சத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி அளிக்கலாம்.
(ந.க.எண் 104/2023 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 291 நாள்: **30.08.2023**

**தீர்மானம்: வார்டு 2ல் அரசூர் சாலையில் மயானப்பகுதியில் ஆழ்துளை குழாய் கிணறு அமைக்கவும், செலவினம் ரூ. 1 .00 இலட்சத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கிறது.**

## பொருள் எண் - 10

பொன்னேரி நகராட்சி தற்போது தரம் உயர்த்தப்பட்டு பொதுசுகாதாரப்பிரிவு, பொறியியல் பிரிவு மற்றும் வருவாய் பிரிவுகளுக்கு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கூடுதலாக நியமனம் செய்து உள்ளதால் அனைத்து பிரிவுகளிலும், கணினி முறையில் பணிகளை மேற்கொள்ள அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான கீழ்காணும் கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் வாங்கிக்கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ. 9,50,000/- மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| Sl.No | Name of the Product | Quantity |
|---|---|---|
| 1 | HP Desktop | 5 |
| 2 | HP Duplex Printer | 4 |
| 3 | UPS 1KV | 7 |
| 4 | Laptop | 1 |

**அலுவலக குறிப்பு:–**

1. அலுவலக பயன்பாட்டின் அவசியம் கருதி பணியினை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2. மேற்கண்ட இனங்களை அரசின் GEM Portal அடிப்படையில் குறைந்த விலைப்புள்ளிகள் மூலம் கொள்முதல் செய்யவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

நகர்மன்ற தீர்மான எண்: 292 நாள்: **30.08.2023**

**தீர்மானம்:** தேவையான கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் வாங்கவும், செலவினம் ரூ,9,50,000/– பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும், அரசின் GEM Portal அடிப்படையில் கொள்முதல் செய்யவும் மன்றம் அனுமதி வழங்குகிறது.

## பொருள் எண் - 11

பொன்னேரி புதிய பேருந்து நிலைய பழைய கட்டண கழிப்பிடத்தை இடித்து ஆண்கள் மற்றும் பெண்கள் பயன்படுத்தும் வகையில் நவீன முறையில் சுய முதலீட்டில் கழிப்பிடம் மற்றும் குளியல் அறை கட்டி ஆண்டுக்கு ரூ. 18,000/- நில வாடகையாக பேரூராட்சிக்கு செலுத்தி பராமரித்து பின்னர் 15 ஆண்டுக்காலம் முடிவில் பேரூராட்சிக்கு ஒப்படைக்க SS Enterprises , Chennai -21 என்ற நிறுவனத்திற்கு பேரூராட்சி மன்றம் தனது தீர்மானம் எண் 176 நாள் 27.09.2007 ன் வாயிலாக ஒப்புதல் வழங்கியதன்பேரில் மேற்படி பொருள் குறித்து பிரேரணை திருவள்ளூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் வழியாக பேரூராட்சிகளின் ஆணையர் சென்னை-108க்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பேரூராட்சிகளின் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் **12540**/2008 நாள் 05.08. 2008 ன் வாயிலாக பொன்னேரி பேரூராட்சி பேருந்து நிலையத்தில் BOOT ( Built, Own, Operate and Transfer ) முறையில் SS Enterprises , Chennai -21 என்ற நிறுவனம் மூலம் ஆண்கள் மற்றும் பெண்கள் பயன்படுத்தும் வகையில் நவீன கழிப்பிடம் கட்டுதல் பராமரித்தல் மற்றும் மீள ஒப்படைத்தல் முறையின்கீழ் **15** ஆண்டுகள் பணிகள் மேற்கொண்டு நல்லமுறையில் மீண்டும் பேரூராட்சி நிர்வாகத்திடம் ஒப்படைக்கவும், இதற்குரிய வாடகையாக வருடம் ஒன்றுக்கு ரூ.**18,000/-** வசூலித்துக்கொள்ளவும், அனுமதி வழங்கப்பட்டதின்பேரில் பொன்னேரி பேரூராட்சி செயல் அலுவலர் செயல்முறை ஆணை ந.க.எண் **177**/2007/அ**1** நாள் **11.08.2008**ன்வாயிலாக ஒப்பந்தகாலம் **01.09.2008** முதல் **31.08.2023** வரை **15** ஆண்டுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

SS Enterprises , நிறுவனத்தின் **15** வருட அனுமதிக்காலம் **31.08.2023**ல் முடிவடையும் நிலையில் மேற்படி நிறுவனம் மேற்குறிப்பிட்ட **15** ஆண்டு காலத்தில் 2020-21 மற்றும் 2021-22 ஆகிய இரு நிதியாண்டுகளில் கொரோனா ( Covid -19 ) தொற்று நோயின் காரணமாக அரசால் முழு அடைப்பு நடைமுறைப்படுத்தப்பட்ட நிலையில் கட்டணக்கழிப்பிடம் செயல்படாமலேயே **2020-21** மற்றும் **2021-22** ம் ஆண்டுக்கு பொன்னேரி நகராட்சிக்கு தரை வாடகை செலுத்தி உள்ளதால் Boot முறையிலான ஒப்பந்த காலத்தை **2** ஆண்டுகளுக்கு நீட்டிப்பு செய்து தருமாறு **03.07.2023** தேதிய கடிதத்தின் வாயிலாக விண்ணபித்துக் கொண்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் முடிவு மேற்கொள்ளலாம்
( ந.க.எண். **104** /2023 அ1 )

நகர்மன்ற தீர்மான எண்: 293 நாள்: **30.08.2023**

**தீர்மானம்: பொன்னேரி புதிய பேரூந்து நிலைய நவீன முறையில் சுய முதலீட்டில், கழிப்பிடம் மற்றும் குளியல் அறை கட்டி ஆண்டுக்கு ரூ.18,000/–நில வாடகையாக,01.09.2008 முதல் 31.08.2023 வரை 15 ஆண்டுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, கொரோனா தொற்று நோயின் காரணமாக அரசின் முழு அடைப்பால் கட்டணக்கழிப்பிடம் செயல் படாததாலும், தரை வாடகை செலுத்தி உள்ளதாலும், Boot முறையில் ஒப்பந்த காலத்தை 2 ஆண்டுகளுக்கு நீட்டிப்பு செய்து தர 03.07.2023 அன்று கடிதத்தின் வாயிலாக விண்ணபித்துள்ளதால் அதை அனுமதிக்க (நீட்டிப்பை) மன்றம் முடிவு மேற்கொண்டுள்ளது.**

## பொருள் எண் - 12

பொன்னேரி நகராட்சி பகுதியில் மகளிர் உரிமைத்தொகை வழங்கும் திட்டத்தினை செயல்படுத்த ஏதுவாக உரிய விண்ணப்பப்படிவங்களை பெறுவதற்காக அமைக்கப்படும் முகாம்களில் சார்மினார் பந்தல்கள் அமைக்கவும், மேசை , நாற்காலிகள் சப்ளை செய்யவும், குடிநீர் மற்றும் உணவு சப்ளை செய்திட தோராய செலவினம் ரூ.**4.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. திட்டத்தின் அவசியம் கருதி மேற்கண்ட பணிகளை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. தமிழக அரசின் உத்திரவின்படி 24.07.2023 முதல் 20.08.2023 வரை மூன்று கட்டங்களாக நடைபெற்ற முகாம்களில் மேற்கண்ட வசதிகளை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை தொடர்ந்தமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.
(ந.க.எண். 342 /2023 அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 294 நாள்: 30.08.2023

**தீர்மானம்: பொன்னேரி நகராட்சி பகுதியில் மகளிர் உரிமைத்தொகை வழங்கும் திட்டத்தினை செயல்படுத்த, செலவினம், ரூ. 4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்பட்டு, அனுமதி வழங்கப்படுகிறது. செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும், தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி அளிக்கிறது.**

## பொருள் எண் - 13

இந்நகராட்சியில் நிரந்தர பணியாளர்களாக பணிபுரியும் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் சேமநலநிதி கணக்குகளின் பேரில் வட்டித்தொகை உள்ளாட்சி நிதித்தணிக்கை இயக்கத்திலிருந்து பெறப்படாதது குறித்து 2012-13ம் ஆண்டு சென்னை மாநில கணக்காயர் அலுவலக தணிக்கை அறிக்கை பத்தி எண் 21-103/12-13 பத்தி எண் 04-ல் தணிக்கை தடை எழுப்பப்பட்டுள்ளது.

மேலும், உள்ளாட்சி நிதித்தணிக்கை அறிக்கைகளிலும் மேற்படி பொருள் குறித்து தணிக்கை தடைகள் எழுப்பப்பட்டு வருவதால் சேமநலநிதி கணக்கிடும் நிறுவனங்களின் மூலம் விலைப்புள்ளிகள் பெற்று 1996-97 முதல் 2022-23 வரையிலான 27 ஆண்டுகளுக்கு பணியாளர் சேமநலநிதி கணக்குகளின் மீதான வட்டிதொகை கணக்கிட்டு பெறுவதற்கும், உள்ளாட்சி நிதித்தணிக்கை இயக்ககத்திற்கு கருத்துருக்கள் சமர்ப்பித்து வட்டித்தொகை கோரி பெறுவதற்கும் தோராய செலவினம் ரூ.170000/-ஐ பொதுநிதியிலிருந்து செலவிட்டுக்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
(ந.க.எண். 658/2023/அ2)

நகர்மன்ற தீர்மான எண்: 295 நாள்: 30.08.2023

**தீர்மானம்: 1996–1997 முதல் 2022–2023 வரை 27 ஆண்டுகளுக்கு, சேமநலநிதி கணக்குகளின் மீதான வட்டித்தொகை, கணக்கீட்டு பெறுவதற்கும், உள்ளாட்சி நிதித்தணிக்கை இயக்ககத்திற்கு கருத்துருவினை சமர்ப்பித்து வட்டித்தொகை கோரி பெறுவதற்கும் செலவினம் ரூ.1,70,000 /– ஐ பொதுநிதியிலிருந்து செலவிட்டுக் கொள்ள மன்றத்தின் அனுமதி வழங்கப்படுகிறது .**

## பொருள் எண் - 14

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி நகராட்சி பகுதியில் திருமதி . கே. ஜெயஸ்ரீ கிலாரி என்பவருக்கு சொந்தமான சர்வே எண் **434**/4B, 434/1D2, 435/6B - ல் மொத்தப்பரப்பளவு **6115** ச.மீட்டரில் **4351.13** சதுர மீட்டர் இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் , திருவள்ளூர் மாவட்டம் அவர்களால் ந.க.எண் 48/W7DJUX/2022/TCP நாள் **03.04.2023** ன் வாயிலாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி மனைப்பிரிவில் உள்ள மொத்த சாலைகள் **1763.87** ச.மீ, உள்ளாட்சிக்கு ஒதுக்கி தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டதை தொடர்ந்து , மேற்படி மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் பெறுவதற்கு செலுத்தப்படவேண்டிய கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளதால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
   (ந.க.எண். **406**/2023/அ**2** )

நகர்மன்ற தீர்மான எண்: 296 நாள்: **30.08.2023**

**தீர்மானம்: பொன்னேரி நகராட்சி பகுதியில் திருமதி கே ஜெயஸ்ரீ கிலாரி என்பவருக்கு சொந்தமான சர்வே எண் 434/4B, 434/1D2, 435/6B-மொத்த சாலைகள் 1763.87 ச.மீ, உள்ளாட்சிக்கு ஒதுக்கி தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டதை தொடர்ந்து, மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் பெறுவதற்கு செலுத்தப்படவேண்டிய கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளதால் – இறுதி ஒப்புதல் வழங்க மன்றம் ஒப்புதல் வழங்குகிறது.**

## பொருள் எண் - 15

பொன்னேரி நகராட்சியில் டெங்கு கொசு ஒழிப்பு பணிக்காக Fogging Machine , Gas Container கொள்முதல் செய்ய விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்காணும் விவரப்படியான விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எ | நிறுவனத்தின்பெயர் | சிறிய புகைமருந்து இயந்திரம் | Gas Container |
|---|---|---|---|
| 1 | System Engineering, Chennai | **23,520** | 330 |
| 2 | RK Agency , Chennai | **24,640** | 345 |

மேற்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த System Engineering, Chennai நிறுவனத்திற்கு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண் **341** /2022 /அ**1**)

நகர்மன்ற தீர்மாண எண்: 297 நாள்: **30.08.2023**

**தீர்மானம்: டெங்கு கொசு ஒழிப்பு பணிக்காக** Fogging Machine , Gas Container கொள்முதல் செய்ய குறைந்த விலைப்புள்ளி அளித்த System Engineering, Chennai நிறுவனத்திற்கு முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றத்தின் அனுமதி கோரப்பட்டு மன்றம் அனுமதி வழங்குகிறது.

## பொருள் எண் - 16

பொன்னேரி நகராட்சி அலுவலகத்திற்கு தினசரி வழங்கப்படும் தினமலர், தினமணி, தினகரன் மற்றும் தினத்தந்தி ஆகிய நாளிதழ்களுக்கு தொகை வழங்க தோராய செலவினம் ரூ.10,000/- க்கு நகர்மன்ற தீர்மானம் எண் 168 நாள் 27.01.2023 ன் வாயிலாக ஒப்புதல் பெறப்பட்டு ஜூலை 2022 முதல் ஜூன் 2023 வரையிலான ஓராண்டு காலத்திற்கு மேற்படி தொகை செலவிடப்பட்டதால் ஜூலை 2023 முதல் நாளிதழ்கள் வாங்கிக்கொள்ளவும், தோராய செலவினம் ரூ.10,000/- ஐ பொதுநிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண் 707 /2022 / அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 298 நாள்: **30.08.2023**

**தீர்மானம்:**

## <u>மேசைப்பொருள் எண் 17</u>

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டம் பொன்னேரி 2 கிராமம் புல எண் **529/2** -ல் டி.எச்.ரோடு, வேண்பாக்கம் பகுதியில் கட்டப்பட்டுள்ள புதிய வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் காலை உணவு திட்டத்திற்கான ஒருங்கிணைந்த சமையற்கூடம் அமைப்பதற்கு வருவாய் துறை மூலம் தடையில்லா சான்று வழங்க, நகர் மன்றத்தின் மூலம் தீர்மானம் இயற்றி அனுப்பி வைக்குமாறு பொன்னேரி வட்டாட்சியர் அவர்களால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது . எனவே மேற்படி இடத்தில் கட்டப்பட்டுள்ள புதிய வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் அதன் வளாகத்தில் அமைந்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் காலை உணவு திட்டத்திற்கான ஒருங்கிணைந்த சமையற்கூடம் கட்டிடம் அமைக்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண். **657** /2023/அ1 )

நகர்மன்ற தீர்மாண எண்: 299 நாள்: **30.08.2023**

**தீர்மானம்: நகராட்சி அலுவலகத்திற்கு தினசரி வழங்க July 2023-** முதல் ஓராண்டு காலத்திற்கு – **ரூ.10,000/– பொதுநிதியிலிருந்து செலவு மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்குகிறது.**

(ஒம்) கி. பரிமளம் விசுவநாதன்
நகர்மன்ற தலைவர்,
பொன்னேரி நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையர்,
பொன்னேரி நகராட்சி
திருவள்ளூர் மாவட்டம்